<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 125/2010</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஐனவரி மாதம் 12 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **12.01.2026** |
| **பெயர்** | **கணேசன்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.23 எ.எம்.**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வாதி என் உடன் பிறந்த சகோதரி ஆவார். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வழக்கு சொத்தினை கோரி தாக்கல் செய்துள்ளப்பட்டுள்ளது. எந்த சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பாக்கம் நிலத்திற்கு பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். எவ்வளவு பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியான பாகம் அளவு தெரியவில்லை. என் தந்தை 1990 பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தினை வாங்கினார். 1993 ல் அந்த நிலத்தினை விற்றுவிட்டார்.

2. அந்த சொத்தினை வாங்கியதற்கான விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது நான் 10 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். என்னுடைய பிறந்த தேதி 24.06.1976. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1995 ல் பத்தாம் வகுப்பு முடித்தேன். அதன் பிறகு எந்த படிப்பும் பயிலவில்லை. என் தந்தை 1990 ல் பாக்கம் கிராமத்தில் சொத்தினை வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு மூலதனம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த வருமானத்தை வாங்கினார் என்றால் என் தாயின் நகையை வைத்தும், நெல் மற்றும் வேர்கடலை பயிர் செய்ததில் இருந்தும் மற்றும் குத்தகைக்கு பயிர் செய்த நிலத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்தும் வாங்கினார்.

3. மேற்சொன்ன விவரத்தை எனது பதிலுரையிலோ, எனது

பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. என் தந்தை கூறி தான் எனக்கு விவரம் தெரியும். நான் 10 ம் வகுப்பு படித்து கொண்டிருந்த நிலையில் என் தந்தை நிலத்தினை வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எனக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் படிக்க, எழுத தெரியுமா என்றால் தமிழ் மட்டும் தான் தெரியும்.

4. சாட்சியிடம் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையை காண்பித்து அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என கேட்டதற்கு சாட்சி தெரியும் என்று பதில் அளித்தார். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்றும் என் தகப்பனார் கூறியதன் பெயரில் மட்டுமே கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் இரண்டு அட்டவணை சொத்துக்களின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். அ அட்டவணை சொத்து என்ன என்றால் காண்பித்தால் கூற இயலும்.

5. அ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 4 ஐடம் சொத்துக்களை எனது தந்தைக்கு எப்படி கிடைக்கபெற்றது என்றால் என் தாத்தா சுப்பிரமணிய முதலியார் வாங்கி அதன் பிறகு என் தந்தைக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெ ற்றது. 23.09.1985ல் தான் பாகப்பிரிவினை வா.சா.ஆ1 மூலம் ஏற்பட்டது என்றால் சரிதான். என் தந்தைக்கு அவருக்குண்டான பாகம் கிடைக்கப்பட்ட பிறகு யார் அந்த பாகத்தில் குடியிருந்தனர் என்றால் நான், என் தந்தை, என் தாயார் மற்றும் என்னுடைய இரண்டு சகோதரிகளும் (வாதி உட்பட) குடியிருந்தோம்.

6. அ அட்டவணை சொத்து என் தந்தைக்கு சுப்பிரமணிய முதலியாரின் வாரிசு என்ற அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்பட்ட தேதிக்கு முன்பே வாதி பிறந்துவிட்டார் என்றால் சரிதான். அ அட்டவணை சொத்தில் தான் என் தந்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். அ அட்டவணை சொத்தினை தவிர்த்து என் தந்தைக்கு அந்த காலக்கட்டத்தில் வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை.

7. அந்த குறிப்பிட்ட இடத்தில் விவசாயம் செய்த வருமானம் மட்டும் தான் என் தந்தைக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வருமானத்தை தவிர வேறு வருமானம் என் தந்தைக்கு இல்லை என்றால் ரியல்எஸ்டேட் தொழிலும் செய்து வந்தார். மேற்சொன்ன ரியல் எஸ்டேட் தொழில் குறித்து என் பதிலுரையிலோ அல்லது என் பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால், வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. 1990 காலகட்டத்திலேயே என் தநதை ரியல் எஸ்ட்டேட் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எந்த இடத்தில், என்ன பெயரில் ரியல் எஸ்டேட் செய்து வந்தார் என்றால் அவ்வாறு எந்த இடமும் இல்லை. நிலம்

வாங்க கேட்போருக்கு வாங்கி கொடுத்தார். அலுவலகமும் எதுவும் இல்லை.
8. 1990-ல் நான் மைனராக இருந்த காரணத்தினால் அந்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அனைத்து விவரமும் தெரியும். ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. இடைத்தரகராக இருந்ததாக கூறுகிறேன் என்றால் ஆம். இடைத்தரகராக இருந்த போது சொத்தினை யாருக்கு விற்பனை செய்து இருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 11.55 எ.எம்.**